SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

## சுருக்கம்

**கூட்டுறவு – மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கே.சி.சி. திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு வழங்கப்படும் கடன்களை உரிய காலத்தில் செலுத்துபவர்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யும் திட்டத்தினை விரிவுபடுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.122.

நாள் : 08.12.2021.
பிலவ வருடம், கார்த்திகை – 22.
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது :

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் ந.க. எண்.49860/ 2021/ மவகொ1, நாள் 16.09.2021.

*******

**ஆணை :**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

**அறிவிப்பு எண்.7**

**கேசிசி திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு கடன் வழங்குதல்.**

"தற்போது கேசிசி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இது விவசாய கடன்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், இனி கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள், தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற்று உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளிடமிருந்து 2009-ஆம் ஆண்டு முதல் வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை எனவும், விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி தொகை முழுவதையும் வட்டி ஊக்கத்தொகையாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அரசு செலுத்தி வருகிறது எனவும், மேலும், தமது சொந்த நிதியிலிருந்து பயிர்க்கடன் வழங்கி வரும் கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகளுக்கு 2% வட்டி மானியத்தினையும் அரசு வழங்கி வருகிறது என்றும், 01.10.2019 முதல் கே.சி.சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு மட்டுமே வட்டி ஊக்கத்தொகை வழங்கப்படும் என தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஓர் ஆண்டில் குறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டுமே பயிர்சாகுபடி செய்யப்படுகிறது. இதர காலங்களில் விவசாயிகள், நிலமற்ற விவசாயக் கூலிகள், மற்றும் மகளிர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு கூடுதல் வருமானம் ஈட்டி வருகின்றனர். மேலும், தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (Gross State Domestic Product , GSDP), 2019-20-ஆம் ஆண்டில் 5.21% கால்நடை சார்ந்த தொழில்கள் மூலம் ஈட்டப்பட்டுள்ளது என்றும் அதேபோன்று 2019-20 ஆண்டில் விவசாயம் மூலம் ஈட்டப்படும் மொத்த மாநில உற்பத்தியில், கால்நடை சார்ந்த தொழில்களின் பங்கு 41.58 சதவீதமாக உயர்ந்துள்ளது. எனவே, பயிர்சாகுபடி செய்ய வேளாண் கடன் அட்டை (KCC) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வட்டி ஊக்கத்தொகையினை கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோருக்கும் அவர்களின் நடைமுறை மூலதனக்கடன் (Working Capital) தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, இத்திட்டத்தினை விரிவுபடுத்தலாம் என்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன்கள் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் என கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கூறிய சூழ்நிலையில், கேசிசி திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம் வரை விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது என்றும் இந்தக் கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டு வரும் நிலையில், அதனை கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக ஆணை வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கோரியுள்ளார்.

6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, பயிர்சாகுபடி செய்ய வேளாண் கடன் அட்டை (KCC)

திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வட்டி ஊக்கத்தொகையினை கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோருக்கும் அவர்களின் நடைமுறை மூலதனக்கடன் (Working Capital) தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக பயிர்க் கடனுக்கு வழங்குவதை போலவே, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களும் பெறும் நடைமுறை மூலதனக் கடனுக்கும் இத்திட்டத்தை விரிவாக்கலாம் என்று அரசு முடிவு செய்து, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

- நடைமுறை மூலதனக்கடன் (Working Capital) தேவைகளைப் பூர்த்தி செய்ய மட்டுமே இக்கடன் வழங்கப்பட வேண்டும்.
- கடன் பெற்ற தேதியிலிருந்து ஓராண்டுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும்.
- விவசாயிகளுக்கு தற்போது வேளாண் கடன் அட்டை திட்டத்தின் கீழ் ரூ.1.60 இலட்சம் வரை தனிநபர் ஜாமீன் அடிப்படையில் பிணையமின்றி கடன் வழங்குவது போல், இதற்கும் வழங்கலாம்.
- வேளாண் கடன் அட்டை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச கடன்தொகை ரூ.3 இலட்சத்திற்கு உட்பட்டு இக்கடன் வழங்கப்படும். பயிர்க்கடன், கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன் இரண்டும் சேர்ந்து ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- வேளாண் கடன் அட்டை திட்டத்தின் கீழ் பயிர்க் கடன் ஏதும் பெறாமல் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கு மட்டும் வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- உரிய காலத்திற்குள் நடைமுறை மூலதனக் கடனை திருப்பி செலுத்தினால் 7% வட்டி ஊக்கத்தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.
- சொந்த நிதியை பயன்படுத்தும் கூட்டுறவுச் சங்கம் / வங்கிகளுக்கு 2% வட்டி மானியம் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் இத்திட்டத்திற்கு வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத்துறையின் அ.சா.கு. எண்.3435/FS/P/2021, நாள் 13.10.2021-இன்படி வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை- 600 010.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை-600 001.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை-600 004.

மாநில கணக்காயர், சென்னை - 600 018.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை உதவியாளர், சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை - 600 009.

கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை - 9.

நிதி (கூ.உ.ம.நு.பா)த் துறை, சென்னை - 600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 8/12/21

8/12/2021